ஊடீடு 001

## பணத்தினால் ஆதாரப்படுத்தப்படும் மேலதிகப்பற்றுக்களுக்கான விண்ணப்பம்

(தனிநபர் மற்றும் கூட்டுக்கணக்கு வைத்திருப்பவர்கள்) - ஏ.5

முகாமையாளர்,

நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி,

| | | | |
|---|---|---|---|
| வாடிக்கையாளர் வகை | சில்லறை வாடிக்கையாளர்கள் | | |
| திகதி: | 23.∴01.∴2026 12:43 | ஊஜனு | | அடுத்த மீளாய்வுத் திகதி | |

### 1 வாடிக்கையாளர் தகவல் மற்றும் தொடர்பு விபரங்கள்

| விண்ணப்பதாரரின்.∴விண்ணப்பதாரர்களின் முழுப்பெயர்.∴பெயர்கள் | விண்ணப்பதாரரின்.∴ விண்ணப்பதாரர்களின் முகவரி.∴மின்னஞ்சல் முகவரி | தே.அ.அ. இல. | தொடர்பு இலக்கங்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | கையடக்கத் தொலைபேசி | அலுவலகம் | வீடு |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |

### 2 கணக்கு பற்றிய விபரங்கள்

| | |
|---|---|
| சேமிப்புக் கணக்கு இல. | |
| நடைமுறைக் கணக்கு இல.: | |

### 3 வசதி பற்றிய விபரங்கள்

| | |
|---|---|
| வசதியின் வகை | மேலதிகப்பற்று |
| நோக்கம் | |
| கூட்டுமொத்த மேலதிகப்பற்று எல்லை | |
| மீள்கொடுப்பனவுக் காலப்பகுதி | கோரிக்கையின் மீது |
| கோரிக்கையின் தன்மை | |

### 4

| | | |
|---|---|---|
| பிணைப்பொறுப்பின் வகை(தெரிவுசெய்யவும்) | சொந்த வைப்பு - கூட்டு | ஏழு (07) வைப்பீடுகளுக்கு மேல் இருப்பின் அட்டவணை அ இல் தரப்பட்ட பட்டியலின் (அ) இலிருந்து (எ) வரையான நிரலை பூரணப்படுத்தவும். |

| வைப்பீடு வைத்திருப்பவரின் முழுப்பெயர் | வைப்பீட்டின் தன்மை | நாணயம் | வட்டிவீதம் | வைப்புக் கணக்கு இல. | முடிவுறும் காலப்பகுதி | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

| | | |
|---|---|---|
| கையடக்கத்தொலைபேசி இல. | | வங்கியிலிருந்து எஸ்எம்எஸ் மூலம் எவையேனும் அறிவித்தல்களைப் பெறுவதற்கு உமக்கு ஆட்சேபனையில்லாதிருப்பின் (ஓ) எனக் ☐யிடவும் |

மேலே உள்ளீடு செய்யப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என நான் ∴ நாம் இத்தால் உறுதிப்படுத்துவதுடன் மறுபக்கத்தில் உள்ள நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுவதற்கும் உடன்படுகின்றேன்.∴உ

| 1. விண்ணப்பதாரரின் கையொப்பம் | 2. விண்ணப்பதாரரின் கையொப்பம் | 3. விண்ணப்பதாரரின் கையொப்பம் | 4. விண்ணப்பதாரரின் கையொப்பம் |
|---|---|---|---|
| | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| கையொப்பம்.∴கையொப்பங்கள் சரிபார்க்கப்பட்டது ☐ | வங்கி அலுவலரின் பெ | | வங்கி அலுவலரின் கையொப்பம் | |
| | நீகு | | | |

Classification: External Confidential

## நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

### பணத்தினால் ஆதாரப்படுத்தப்படும் மேலதிகப்பற்றுக்கள்

’ஞ 27 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்ட நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி ஆனது, மறுபக்கத்தில் கூறப்பட்டவாறு வங்கியில் எனது ∴ எமது மொத்த வைப்புக் கணக்கில் (கணக்குகளில்) உள்ள மீதிகளுக்கு எதிராக எனது ∴ எமது நடைமுறைக் கணக்கின் ∴ (கணக்குகளின்) மீது மேலதிகப்பற்று வசதியளிப்பதற்கு ∴ அதிகரிப்பதற்கு ∴ குறைப்பதற்கு முனைவதனைக் கருத்திற் கொண்டு, நான் ∴ நாம் பின்வரும் நியதி நிபந்தனைகளுக்கமைய கீழே பின்னிணைப்பில் விவரிக்கப்பட்ட கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு இத்தால் பொறுப்பேற்று உடன்படுகின்றேன் ∴ உடன்படுகின்றோம்.

இந்நியதிநிபந்தனைகளில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலொழிய;

(அ) ”கணக்கு” என்பது, (தனியாக அல்லது வேறு ஆளுடன் கூட்டாக அல்லது உரிமையாண்மையொன்றின், பங்காண்மையின் அல்லது கம்பெயொன்றின் பெயரில்) கடன்பெறுநரின் பெயரில் வங்கியில் வைத்திருக்கப்படும் அல்லது வைத்திருக்கப்படவேண்டிய வங்கிக் கணக்கு அல்லது கணக்குகள் எனப் பொருள்படும்; அவற்றின் எண்ணிக்கை விண்ணப்பப் படிவத்தின் விடயம் 2 இல் குறித்துரைக்கப்படுகின்றது.

(ஆ) ”விண்ணப்பப்படிவம்” என்பது, மறுபக்கத்தில் காணப்படும் மேலதிகப்பற்றுக்களுக்கான பணத்தினால் ஆதாரப்படுத்தப்படும் விண்ணப்பம் எனப் பொருள்படும்.

(இ) ”யுறீடுது, இலங்கை மத்திய வங்கியினால் வாராந்தம் தொகுக்கப்படும் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதம் எனப் பொருள்படுதல் வேண்டும்.

(ஈ) ”வங்கி” அல்லது னேடீ வங்கி” என்பது, ”ஞ 27 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதும் கொழும்பு 02, நவம் மாவத்தை, இல. 40 இல் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக்கொண்டதுமான நஷனல் டிவலப்மென்ட் பாங்க் பிஎல்சி எனப் பொருள்படுதல் வேண்டும் என்பதுடன் விடயத்துக்கேற்ப அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்களை உள்ளடக்குதலும் வேண்டும்.

(உ) ”கடன்பெறுநர் என்பது, விடயத்துக்கேற்ப தனது ∴ தமது முறையான மரபுரிமையாளர்கள் நிறைவேற்றுநர்கள் நிருவாகிகள் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்களுடன் சேர்த்து வங்கியிலிருந்து மேலதிகப்பற்று வசதியொன்றுக்காக இவ்விண்ணப்பப்படிவத்தின் விடயம் 1 இல் மேலும் விபரமாக விவரிக்கப்பட்ட விண்ணப்பதாரர் ∴ விண்ணப்பதாரர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

(ஊ) ”வைப்பு ∴வைப்புக்கள்” என்பது, இவ்விண்ணப்பப்படிவத்தின் விடயம் விடயம் 4 இல் மேலும் விபரமாக விவரிக்கப்பட்ட சேமிப்புக் கணக்குகள் உட்பட வைப்பு அல்லது வைப்புக்கள் எனப் பொருள்படுதல் வேண்டும் என்பதுடன் இந்நியதிநிபந்தனைகளின் வாசகம் 9 இல் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு புதுப்பிக்கப்பட்ட வைப்புக்களை உள்ளடக்குதலும் வேண்டும்.

(எ) ”வைப்பீடு வைத்திருப்பவர்” என்பது, எந்த வைப்பீடு வைத்திருப்பவர்களின் பெயர்கள் மற்றும் வைப்பீடுகள் பற்றிய விபரங்கள் விண்ணப்பப்படிவத்தின் விடயம் விடயம் 4 இல் உள்ளடக்கப்படுகின்றதோ அந்த வைப்பீடு வைத்திருப்பவர்கள் எனப் பொருள்படுதல் வேண்டும்.

(ஏ) ”வசதிபது, இந்நியதிநிபந்தனைகளுக்கான பின்னிணைப்பில் விவரிக்கப்பட்ட கடன்பெறுநருக்கு வழங்கப்படும் மேலதிகப்பற்று வசதி எனப் பொருள்படுதல் வேண்டும்.

(ஐ) ”வசதி வட்டி வீதம் (வீதங்கள்)” என்பது, கடன் வசதியின் மீது வங்கியினால் அறவிடப்படும் வட்டி வீதம் எனப் பொருள்படுதல் வேண்டும். இது தொடர்பில் சொல்லப்பட்ட வட்டி வீதம் வங்கிக்கு சோந்தையின் கீழ் வைத்திருக்கப்படும் ஒவ்வொரு வைப்பீட்டுக்கும் ∴ வைப்பீடுகளுக்கும் ஏற்புடையதான இயைபான வட்டி வீதத்துக்கு இணைக்கப்படும். வெளிநாட்டு நாணய வைப்பீடு ∴ வைப்பீடுகளின் பிணைப்பொறுப்புக்கு எதிராக வழங்கப்படும் இ.ரு. கடன் வசதிகளுக்கான வட்டி வீதம் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன்வழங்கல் வீதத்திற்கு (யுறீடுசு) இணைக்கப்படும். கடன் வசதி பல வைப்பீடுகளினால் பிணைப்பொறுப்பளிக்கப்படுகின்ற பட்சத்தில், மேலதிகமாகப் பெறப்பட்ட மீதிகளின் மீதான வசதி வட்டி வீதம் ஒவ்வொரு நேரொத்த மேலதிகப்பற்று உப எல்லையின் மீது ஏறுவரிசை ஒழுங்கில் அறவிடப்படும்.

(ஒ) ”வேண்டுப்புற்றுவொரு வைப்பீட்டின் மீதும் வங்கியினால் தீர்மானிக்கப்படும் வசதி எனப் பொருள்படுதல் வேண்டும்.

(ஓ) ”நியதிகள் மற்றும் நிபந்தனைகள்” என்பது, வசதிக்கு ஏற்புடையதான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் எனப் பொருள்படுதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவத்தின் பாகமாக அமைதலும் வேண்டும்.

இந்நியதி நிபந்தனைகளில் ஒருமைக்கான குறிப்பீடுகள் பன்மையையும் மறுதலையாகவும் உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலை உள்ளடக்குதலும் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடன்பெறுநர்கள் இருக்கின்றவிடத்து, கடன்பெறுநருக்கான குறிப்பீடுகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் கடன்பெறுநர்களுக்கான குறிப்பீடாக வாசிக்கப்படுதலும் வேண்டும்.

1 இவ்வசதியை வழங்குவதானது வங்கியின் தனித்தற்றுணிபில் இருக்கும்.

2 விண்ணப்பப்படிவத்தில் கடன்பெறுநரினால் கோரப்படும் தொகை எவ்வாறிருப்பினும், வசதிக்குக் குறிப்பான நியதிகள் இதற்கான பின்னிணைப்பில் விவரிக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

3 வசதியைப் பெற்றுக்கொள்ளும் நேரத்தில் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட வேறு விதிப்பனவுகளுடன் சேர்த்து விண்ணப்பப்படிவத்துக்கான பின்னிணைப்பில் மற்றும் இருப்பின் அட்டவணை அ இல் விதிக்கப்பட்ட வசதி வட்டி வீதம் (வீதங்கள்) எவ்வாறிருப்பினும், வசதி மீதான வட்டி வீதங்கள் மற்றும் விதிப்பனவுகள் கடன்பெறுநருக்கான அறிவித்தலின்றி காலத்துக்குக்காலம் மாற்றம் மற்றும் தளம்பல்களுக்கு அமைந்தனவை என கடன்பெறுநர் மேலும் ஒப்புக்கொள்கின்றார். கடன்பெறுநர் அத்தகைய மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் ∴ ஏற்றுக்கொள்வதற்கு இயலாதவராகவிருக்கின்ற பட்சத்தில் அத்துடன் அப்பொருள்பட வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கின்ற பட்சத்தில், கடனானது அப்போது கோரிக்கையின் மீது செலுத்தப்படற்பாலதாக வருதல் வேண்டும்.

4 சொல்லப்பட்ட மேலதிகப்பற்று வசதியின் கீழ் வருமதியாகவும் செலுத்தப்படத்தக்கதாகவும் உள்ள எல்லாப் பணங்களும் கோரிக்கையின் மீது கடன்பெறுநரினால் வங்கிக்கு செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

5 கடன்பெறுநரினால் வங்கிக்குச் செய்யப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகள் பின்வரும் முன்னுரிமை ஒழுங்குவரிசைப்படி வங்கிக்கு வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளுக்கு எதிராக வங்கியினால் பயன்படுத்தப்படும்:-

(அ) வேறு விதிப்பனவுகள்

(ஆ) வட்டி

(இ) பிரதான கடன் வசதி

6 வங்கியானது இலங்கை அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அறவிடப்படும் எவையேனும் நியதிச்சட்ட விதிப்பனவுகளுக்கு அமைய ஒவ்வொரு வைப்பீட்டுக்கும் இணைக்கப்பட்ட வசதி வட்டி வீதம் (வீதங்கள்) மற்றும் மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியை மாற்றுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

7 வங்கியினால் வைத்திருக்கப்படும் (விண்ணப்பப்படிவத்தின் விடயம் 4 இல் மேலும் விபரமாக விவரிக்கப்பட்ட) வைப்பீடு ∴ வைப்பீடுகளை மற்றும் வங்கியில் கடன்பெறுநரினால் ∴ வைப்பீடு வைத்திருப்பவரினால் ∴ வைப்பீடு வைத்திருப்பவர்களினால் செய்யப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வைப்பீடு ∴ வைப்பீடுகளை கடன்பெறுநர் இத்தால் சோந்தையில் இடுகின்றார் அத்துடன் ∴ அல்லது கடன்பெறுநர் வைப்பீடு வைத்திருப்பவர் ∴ வைத்திருப்பவர்கள் சோந்தையில் இடுவதனை செய்வித்தல் வேண்டும். இவ் வைப்பீடு ∴ வைப்பீடுகள் இவ் வசதிக்காலப்பகுதியின் போது முதிர்வில் தன்னிச்சையாக புதுப்பிக்கப்படும் என்பதுடன் வசதிக்கான பிணைப்பொறுப்பாக தொடர்ந்திருத்தலும் வேண்டும். கடன்பெறுநர் வைப்பீடு ∴ வைப்பீடுகளின் முதிர்வின்போது அவற்றை மீள முதலீடு செய்வதற்கும் வங்கியின் தற்றுணிபில் மேலதிக காலப்பகுதியொன்றிற்கு சொல்லப்பட்ட வைப்பீட்டை ∴ வைப்பீடுகளை புதுப்பிப்பதற்கும் வசதி முழுமையாக செலுத்தப்படும் அத்தகைய நேரம் வரை வசதிக்கான பிணைப்பொறுப்பாக சொல்லப்பட்ட வைப்பீட்டை ∴ வைப்பீடுகளை வைத்திருப்பதற்கும் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார் என்பதுடன் வைப்பீடு வைத்திருப்பவர் ∴ வைத்திருப்பவர்கள் அதிகாரம் அளிப்பதனையும் செய்விக்கின்றார்.

8 அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட வைப்பீடு ∴ வைப்பீடுகள் வங்கிக்கு குறித்தளிக்கப்பட்டு உரித்தாக்கப்படுதல் வேண்டும் எனவும் வசதி முழுமையாக மீளச் செலுத்தப்படும் அத்தகைய காலம் வரை எச்சூழ்நிலைகளின் கீழும் (விடயத்துக்கேற்ப) கடன்பெறுநரினால்∴ வைப்பீடு வைத்திருப்பவரினால் ∴ வைத்திருப்பவர்களினால் அல்லது கடன்பெறுநரின் அல்லது வைப்பீடு வைத்திருப்பவரின் ∴ வைத்திருப்பவர்களின் மரபுரிமையாளர்கள், நிருவாகிகள், நிறைவேற்றுநர்கள் அல்லது அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்களினால் மீளப்பெறுவதற்கு கிடைக்கக்கூடியதாக்கப்படுதலாகாது எனவும் கடன்பெறுநர் இணங்குகின்றார் என்பதுடன் வைப்பீடு வைத்திருப்பவரை ∴ வைத்திருப்பவர்களை இணங்கவும் செய்விக்கின்றார்.

9 கடன்பெறுநர், பின்வருவனவற்றைச் செய்வதற்கு வங்கிக்கு இல்லாதொழிக்கமுடியாதவகையில் அதிகாரமளிக்கின்றார் என்பதுடன் வைப்பீடு வைத்திருப்பவர் ∴ வைத்திருப்பவர்கள் இல்லாதொழிக்கமுடியாதவகையில் அதிகாரமளிப்பதனையும் செய்விக்கின்றார்;

(அ) வைப்பீட்டை ∴ வைப்பீடுகளை வசதிக்கான தொடர்ந்திருக்கும் பிணைப்பொறுப்பொன்றாக வைத்திருப்பதற்கும்.

(ஆ) வைப்பீடு ∴ வைப்பீடுகள் நிலையான காலமொன்றுக்காகவுள்ளது என்ற நிகழ்வு மற்றும் காலப்பகுதி முடிவடைந்திருக்கக்கூடும் அல்லது முடிவடையாதிருந்திருக்கக்கூடும் என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் வைப்பீடு ∴ வைப்பீடுகளின் மீளப்பெறுகைக்கான விண்ணப்பம் ஒன்றை முழுமையாக அல்லது பகுதியளவில் மறுப்பதற்கும்.

(இ) வைப்பீடு ∴ வைப்பீடுகள் நிலையான காலமொன்றுக்காகவுள்ளது மற்றும் காலப்பகுதி முடிவடைந்திருக்கக்கூடும் அல்லது முடிவடையாதிருந்திருக்கக்கூடும் என்பது எவ்வாறிருப்பினும் வசதியின் மீள்கொடுப்பனவில் வைப்பீட்டின் ∴ வைப்பீடுகளின் முழுமையை அல்லது ஏதேனும் பகுதியை ஒதுக்கீடு செய்வதற்கும்.

(ஈ) அத்தகைய ஏதேனும் ஒதுக்கீட்டு நோக்கத்துக்காக, வைப்பீட்டின் ∴ வைப்பீடுகளின் முழுமையை அல்லது ஏதேனும் பகுதியை கடன்பெறுநரின் ∴ வைப்பீடு வைத்திருப்பவரின் செலவில் அவை வங்கியினால் வைத்திருக்கப்படும் நாணயம் தவிர்ந்த ஏதேனும் நாணயத்துக்கு மாற்றுவதற்கும்.

(உ) இவ்வசதிக் காலப்பகுதியின் போது முதிர்வின் போது வைப்பீட்டை ∴ வைப்பீடுகளை தன்னிச்சையாக புதுப்பிப்பதற்கும்.

10 விண்ணப்பப் படிவத்தின் பின்னிணைப்பின் விடயம் 4 இன் நிரல் (உ) மற்றும் இத்துடன் உள்ள (இருப்பின்) அட்டவணை (அ) இல் விவரிக்கப்பட்ட ஒவ்வொரு வைப்பீட்டுக்கும் இணைக்கப்பட்ட இயைபான வசதி வட்டி வீதம் (வீதங்கள்) இயைபான வைப்பீட்டின் புதுப்பித்தலின் மேல் வங்கியின் தற்றுணிபில் அதனால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என கடன்பெறுநர் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்கின்றார்.

11 வைப்பீடு ∴ வைப்பீடுகள் கடன்பெறுநரின் அல்லது வைப்பீடு வைத்திருப்பவரின் ∴ வைத்திருப்பவர்களின் இறப்பு, வங்கிமுறிவு, ஒழித்துக்கட்டல் அல்லது சித்தசுவாதீனமின்மை மூலம் அல்லது ஏதேனும் பங்காண்மையின் அமைப்பிலான ஏதேனும் மாற்றம் அல்லது கடன்பெறுநராக அமைகின்ற ஆட்களைப் பாதிக்கும் வேறு மாற்றத்தின் மூலம் அல்லது கம்பெனியொன்றை அல்லது கூட்டுத்தாபனமொன்றை உட்படுத்துகின்ற ஏதேனும் ஒன்றிணைப்பு, மீள ஒழுங்குபடுத்தல், ஒன்றிணைவு, ஒடுக்குதல் அல்லது ஒழித்துக்கட்டல் மூலம் கடன்பெறுநர் அத்தகைய கம்பெனியாக அல்லது கூட்டுத்தாபனமாக அமைத்துருவாக்கப்படுகின்றவிடத்து தீர்மானிக்கப்படுதலாகாது, பாதிக்கப்படுதலாகாது அல்லது பங்கமாக்கப்படுதலாகாது என கடன்பெறுநர் உடன்பட்டு பொறுப்பேற்கின்றார் என்பதுடன் வைப்பீடு வைத்திருப்பவர் ∴ வைத்திருப்பவர்கள் உடன்பட்டு பொறுப்பேற்பதைச் செய்விக்கின்றார்.

12 பிணைப்பொறுப்பானது, பத்திரங்களற்ற திறைசேறி உண்டியல் ∴ உண்டியல்கள் அத்துடன் அல்லது திறைசேறி முறி ∴ முறிகள் அத்துடன் அல்லது திறைசேறி உண்டியல் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் (வுசநயளரசல டீடைட சுநிழள) அத்துடன் அல்லது திறைசேறி முறி மீள்கொள்வனவு உடன்படிக்கைகளை (வுசநயளரசல டீழனெ சுநிழள) உள்ளடக்குகின்றவிடத்து, கடன்பெறுநர், சொல்லப்பட்ட திறைசேறி உண்டியல் ∴ உண்டியல்கள் அத்துடன் அல்லது திறைசேறி முறி ∴ முறிகள் அத்துடன் அல்லது திறைசேறி உண்டியல் மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் அத்துடன் அல்லது திறைசேறி முறி மீள்கொள்வனவு உடன்படிக்கைகளை வங்கிக்கு சோந்தையில் இடுவதற்கு பொறுப்பேற்கின்றார் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படும் மத்திய வைப்பக முறையில் வாடிக்கையாளர் ஐனு இன் கீழ் மத்தியக வைப்பகக் கணக்கின் கீழ் அடைமான வகையொன்றுக்கு அத்தகைய பிணைப்பொறுப்பை கைமாற்றுவதற்கான ஒழுங்கேற்பாடுகளை வங்கி செய்வதற்கு இத்தால் அதிகாரமுமளிக்கின்றார்.

13 கடன்பெறுநர், ஏதேனும் நேரத்தில், காலத்துக்குக்காலம் மற்றும் எல்லா நேரங்களிலும் கடன்பெறுநரிடமிருந்து வருமதியாகவுள்ள வட்டி, விதிப்பனவுகள் மற்றும் ஆகுசெலவுகள் எல்லாவற்றுடனும் சேர்த்து திறைசேரி உண்டியல்கள் ∴ முறிகளின் புதிய வழங்குகைகள் என்ற வடிவத்தில் வைத்திருக்கப்படும் அத்தகைய எல்லா வைப்பீடுகளையும் விற்பனை செய்வதற்கு ∴ எதிரீடுசெய்வதற்கு வங்கிக்கு மேலும் அதிகாரமளிக்கின்றார்.

14 சட்ட நடைமுறை மூலம் அல்லது வேறு வகையாக, வங்கி உரித்துடையதாகக்கூடிய ஏதேனும் பொதுவான சோந்தை அல்லது வேறு உரிமைகள் அல்லது பரிகாரங்களுக்கு மேலதிகமாக, வங்கியானது எந்நேரத்திலும் கடன்பெறுநருக்கான அறிவித்தலின்றியும் வங்கியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் அல்லது அதன் கிளை அலுவலகங்கள் எவற்றிலும் கடன்பெறுநரின் வரவுக்கு இருக்கும் எல்லாப் பணங்களையும் இணைக்கலாம் ஒன்றிணைக்கலாம் அல்லது ஒதுக்கீடுசெய்யலாம். இக்கட்டற்ற உரிமை மற்றும் கடன்பெறுநரினால் வங்கிக்கு வழங்கப்படும் இல்லாதொழிக்கமுடியாத அதிகாரம் கடன்பெறுநரினால் வங்கியின் மீது வரையப்படும் காசோலைகள் கோரிக்கைகள் மீளப்பெறுகைகள் அல்லது வேறு ஆவணங்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்கும் அல்லது அவற்றுக்குச் செலுத்தும் அளவுக்கு அல்லது வங்கியின் ஏதேனும் அலுவலகத்தில் கடன்பெறுநரின் பெயரில் உள்ள ஏதேனும் கணக்கை முடிவிடும் அளவுக்குக்கூட பிரயோகிக்கப்படலாம். மேலும், வங்கியின் அத்தகைய நடவடிக்கையின் விளைவாக வங்கியின் மீது செய்யப்படக்கூடியவாறான எல்லா உரிமைக்கோரிக்கைகளுக்கும் அல்லது கோரிக்கைகளுக்கும் எதிராக நட்டோத்தரவாதமளிப்பதற்கு கடன்பெறுநர் பொறுப்பேற்கின்றார்.

15 வங்கியின் வருமானத்தின்மீது அதனால் செலுத்தப்படற்பாலதான கூட்டாண்மை நிறுவன வரிக்காகத் தவிர, வசதியை வழங்குவதன் விளைவாக வங்கியினால் செலுத்தப்படற்பாலதான தற்போது அரசாங்கத்தினால் அறவிடப்படும் எவையேனும் மற்றும் எல்லா அறவீடுகளையும் அல்லது எதிர்காலத் திகதியொன்றில் அறவிடப்படவேண்டிய ∴ அறிமுகப்படுத்தப்படவேண்டிய வரிகளையும் கடன்பெறுநர் வங்கிக்குக் செலுத்துவார் அத்துடன் ∴ அல்லது மீளளிப்பார்.

16 வட்டி மீதான வரிகள் போன்ற அரசாங்கத்துக்கு அத்துடன் ∴ அல்லது ஏதேனும் அரசாங்க அதிகார சபைக்கான கொடுப்பனவுகள், சட்டச் செலவுகள் மற்றும் வங்கியின் சாதாரண தொழில் நெறியின்போது காலத்துக்குக்காலம் வங்கியினால் கடன்பெறுநரிடமிருந்து அறவிடப்படும் தரகுப்பணங்கள் மற்றும் விதிப்பனவுகள் அல்லது அறவீடுகள் எல்லாம் உட்பட சொல்லப்பட்ட வசதி தொடர்பாக அல்லது சம்பந்தமாக வங்கியினால் ஏற்கநேர்ந்த எல்லாச் செலவுகளும் ஆகுசெலவுகளும் அவ்வாறு வங்கியினால் ஏற்கநேர்கின்றவாறும் ஏற்கநேரும்போதும் கடன்பெறுநரினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

17 சாதாரண வங்கித்தொழில் செயன்முறைக்கு இசைந்தொழுக, வங்கியானது வருடாந்த அடிப்படையில் வசதியை பரிசீலனை செய்யும். அது எவ்வாறிருப்பினும், வங்கியானது கடன்பெறுநருக்கான அறிவித்தலுடன் கடன் வசதியை புதுப்பிப்பததற்கான அல்லது இரத்துச்செய்வதற்கான அல்லது கடன் வசதி வட்டி வீதம் (வீதங்கள்) உட்பட ஆனால் அவற்றை வரையறுக்காமல் வங்கியின் தனித்தற்றுணிபில் அத்தகைய புதுப்பித்தலின் போது அல்லது வேறு வகையாக வசதி தொடர்பான நியதி நிபந்தனைகளை வேறுபடுத்துவதற்கான முழுத் தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.

18 இதன்கண் வழங்கப்படும் வசதி இலங்கை மத்திய வங்கியினால் அத்துடன் அல்லது வேறு ஏதேனும் இயைபான அதிகாரசபையினால் அல்லது நிறுவனத்தினால் அல்லது நியதிச்சட்டக் குழுவினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படுகின்ற அல்லது வழங்கப்படக்கூடிய இயைபான அங்கீகாரங்கள், பணிப்புரைகள், மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்ததாகும்.

19 வங்கியானது, கடன்பெறுநரின் எல்லாப் பொறுப்புக்களையும் வங்கிக்கு கொடுத்துத் தீர்க்குமாறு உரிமைகோருவதற்கான உரிமையைக கொண்டுள்ளது.

20 வங்கியானது கடன்பெறுநருக்கான அறிவித்தலுடன் அதன் தற்றுணிபில் வசதியை திரிபுபடுத்துவதற்கான அல்லது இரத்துச்செய்வதற்கான உரிமையைக்கொண்டுள்ளது.

21 வங்கியின் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளிலிருந்து தயாரிக்கப்பட்டு வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் கையொப்பமிடப்பட்டு உண்மையானது என சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கணக்கு பற்றிய கூற்று, வசதி தொடர்பில் நிலுவையாகவுள்ளதும் கடன்பெறுநரினால் வங்கிக்கு வருமதியாகவுள்ளதுமான தொகைகள் தொடர்பில் கடன்பெறுநர் மீது பிணிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் முடிவான சான்றாகவிருத்தலும் வேண்டும்.

22 மதிப்பளிக்கப்படின் கணக்கானது அதிகாரமளிக்கப்பட்ட எல்லையை (எல்லைகளை) விஞ்சுவதனை ஏற்படுத்தும் எவையேனும் பெறுகைகளுக்கு மதிப்பளிப்பதற்கு வங்கி மறுக்கலாம். அத்தகைய பெறுகைகள் மறுக்கப்பட்டுள்ளன என கடன்பெறுநருக்கு அறிவிப்பதற்கான கடப்பாடு எதனையும் வங்கி கொண்டிருப்பதில்லை. வங்கியினால் அல்லது அதன் அலுவலர்கள் எவரினாலும் அளிக்கப்படும் நீடிப்பு, விட்டுக்கொடுப்பு அல்லது சலுகை எதுவும் இதன் கீழான வங்கியின் உரிமைகளை பங்கப்படுத்துதலாகாது. அதிகாரமளிக்கப்பட்ட எல்லை விஞ்சுகின்ற பட்சத்தில், ஏதேனும் மேன்மிகை இந்நியதிநிபந்தனைகளின் நியதிகளுக்கு அமைந்ததாகவிருக்கும் என கடன்பெறுநர் ஒப்புக்கொள்கின்றார்.

23 கடன்பெறுநரின் நிதிசார் ஆற்றல் அத்துடன் அல்லது வசதிக்கு வழங்கப்படும் பிணைப்பொறுப்பை பாதிப்பதற்கு முனைகின்ற கடன்பெறுநரை அல்லது வைப்பீடு வைத்திருப்பவரை ∴ வைத்திருப்பவர்களை உட்படுத்தி எழக்கூடிய ஏதேனும் வழக்கு தொடர்பாக விபரமாகக் கூறப்பட்ட தகவல்களை கடன்பெறுநர் வங்கிக்கு அறிவித்தல் வெண்டும் என்பதுடன் அத்தகைய வைப்பீடு வைத்திருப்பவரை அறிவிக்கச் செய்வித்தலும் வேண்டும்.

24 வசதி மீதான வசதி வட்டி வீதம் (வீதங்கள்) மற்றும் வேறு விதிப்பனவுகளுடன் சேர்த்து வசதி தொடர்பில் செலுத்தப்படத்தக்கதான பணங்கள் காலவிதிப்புக் கட்டளைச்சட்டம் (பிரிவு 68) எவ்வாறிருப்பினும் அறவிடப்படற்பாலனவாதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட பணங்களை அறவிடுவதற்கு வங்கி கடன்பெறுநருக்கு எதிராக வழக்குத்தொடுப்பதற்கான தடையொன்றாக அத்தகைய கட்டளைச்சட்டத்தை கடன்பெறுநர் வாதுரைசெய்தலுமாகாது.

25 வங்கி கடன்பெறுநருக்கு அறிவிக்க விரும்புகின்ற வசதி தொடர்பான எவையேனும் உரிமைக்கோரிக்கைகள், அழைப்பாணைகள், அறிவித்தல் அல்லது அறிவிப்பு வங்கிக்கு கடைசியாக அறியப்பட்ட கடன்பெறுநரின் முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் எழுத்தில் வழங்கப்படின், கடன்பெறுநருக்கு உரியமுறையில் வழங்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும். வசதி வட்டி வீதத்திலான (வீதங்களிலான) மாற்றங்கள் பற்றிய அறிவித்தலும், உள்நாட்டு பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அத்துடன் ∴ அல்லது வங்கியின் வளவுகளில் வெளிக்காட்டிவைக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வழங்கப்படலாம். வங்கிக்கான கடன்பெறுநரினாலான எல்லா அறிவித்தல்களும் கொழும்பு 02, நவம் வாவத்தை, இல.40 இல் உள்ள அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்திற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

26 வங்கியின் ஏதேனும் உரிமையை அல்லது பரிகாரத்தை (முழுமையாக அல்லது பகுதியளவில் மட்டும்) பிரயோகிப்பதில் அல்லது வலுவுறுத்துவதில் வங்கியின் தாமதம் அல்லது விட்டுவிடுகை எதுவும் அத்தகைய உரிமையின் அல்லது பரிகாரத்தின் விட்டுக்கொடுப்பொன்றாக பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது.

27 கடன்பெறுநருக்கு எதிராக (விடயத்துக்கேற்ப) வங்கிமுறிவு அல்லது ஒழித்துக்கட்டல் அல்லது ஒடுக்குதல் வழக்குநடவடிக்கை எதுவும் தொடங்கப்பட்டிருக்கவில்லை எனவும் அல்லது தொடங்குவதற்கு உட்கருதப்பட்டிருக்கவில்லை எனவும் இவ்விண்ணப்பப்படிவத்தில் கொடுத்துதவப்பட்ட எல்லாத் தகவல்களும் உண்மையானவையும் பூரணமானவையும் செம்மையானவையும் எனவும் இவ்விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏதேனும் முக்கியமான தகவலை கடன்பெறுநர் வேண்டுமென்று பிடித்துவைத்திருக்கவில்லை எனவும் கடன்பெறுநர் இத்தால் முன்வைக்கின்றார்.

28 கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு கடன்பெறுநரினால் கடன்பெறுநர் சார்பாக வங்கிக்கு செய்யப்பட்ட பிரதிநிதித்துவங்கள் உண்மையற்றதாக அல்லது செம்மையற்றதாக காணப்படுகின்ற பட்சத்தில் அல்லது இதன்கண் அல்லது வேறு வசதிகளை வழங்குவதற்கு வங்கியுடன் முன்னர் செய்துகொள்ளப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்துகொள்ளப்படவேண்டிய வேறு ஏதேனும் ஒப்பந்தத்தில் ∴ ஒப்பந்தங்களில் கூறப்பட்ட திகதிகளில் வங்கிக்கு வருமதியாகவுள்ள எவையேனும் பணங்களை கொடுப்பனவு செய்யாமை உட்பட ஆனால் அவற்றை வரையறுக்காமல் இதன்கண் தரப்பட்ட நியதி நிபந்தனைகளின் ஏதேனும் மீறுகையை கடன்பெறுநர் புரிகின்ற பட்சத்தில், வங்கியானது, அதன் மீது வங்கிக்கு நிலுவையாகவுள்ளவாறு இவ்வசதி, வட்டி மற்றும் வேறு விதிப்பனவுகளின் கொடுப்பனவை உடனடியாகக் கோருவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

29 இதன்கண் அடங்கியுள்ள வசதியின் நியதிகள் எவற்றுடனும் இணங்கியொழுகாமை தவறுகை நிகழ்வொன்றை ஏற்படுத்துதல் வேண்டும். அத்தகைய விடயங்களில், வங்கியிலிருந்தான அறிவித்தலுடன் அல்லது அறிவித்தலின்றி மேற்கூறப்பட்ட வசதியை இரத்துச்செய்வதற்கான அத்துடன் ∴ அல்லது மீளப்பெறுவதற்கான அத்துடன் ∴ அல்லது அதில் குறைப்பை ஏற்படுத்துவதற்கான மற்றும் நிலுவைகளின் கொடுத்துத்தீர்த்தலிலான பிணைப்பொறுப்பை ஒழித்துக்கட்டுவதற்கான, அத்துடன் ∴ அல்லது மேற்கூறப்பட்ட வசதியின் மீது தற்போது ஏற்புடையதாகவுள்ள வட்டி வீதத்தை விட உயர் வட்டி வீதமொன்றை ஏற்புடையதாக்குவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

30 இந்நியதிநிபந்தனைகள் இலங்கைச் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும் என்பதுடன் தோதான நியாயாதிக்கம் இலங்கை நீதிமன்றங்களுக்கு உரித்தாக்கப்படுதலும் வேண்டும். எவ்வாறாயினும் வங்கியானது வேறு ஏதேனும் நாட்டில் மேலதிகப்பற்று வசதியின் கொடுத்துத்தீர்த்தலைக் கோருவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் வங்கியானது அத்தகைய நோக்கத்துக்காக வேறு ஏதேனும் நாட்டில் உள்ள ஏதேனும் தோதான நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை வேண்டுவதற்கான உரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| **கடன்பெறுநர் ∴ கடன்பெறுநர்கள் ஆகிய நான் ∴ நாம், மேற்கூறப்பட்ட நியதி நிபந்தனைகளை இத்தால் கவனத்திற்கொண்டு அவற்றை நான் ∴ நாம் ஏற்பதை உறுதிப்படுத்தும் வகையில் இதற்கு எனது ∴ எமது கையொப்பத்தை ∴ கையொப்பங்களை இத்தால் பின்வரும் திகதியன்று இடுகின்றேன்.** | 23.∴01.∴2026 | | | |
| **1.விண்ணப்பதாரரின் கையொப்பம்** | **2. விண்ணப்பதாரரின் கையொப்பம்** | **3. விண்ணப்பதாரரின் கையொப்பம்** | **4. விண்ணப்பதாரரின் கையொப்பம்** | |
| **சாட்சி 1 .** | கையொப்பம் | | **தே.அ.அ ∴ கடவுச்சீட்டு இல.** | |
| **சாட்சி 2 .** | கையொப்பம் | | **தே.அ.அ∴ கடவுச்சீட்டு இல.** | |
| **கையொப்பம்∴கையொப்பங்கள் சரிபார்க்கப்பட்டது** ☐ | **வங்கி அலுவலரின் பெ** | - | **வங்கி அலுவலரின் கையாப்பம்** | |
| | **நீகு** | **0** | | |

## நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கான பின்னிணைப்பு

### பணத்தினால் ஆதாரப்படுத்தப்படும் மேலதிகப்பற்றுக்கள்

| | |
|---|---|
| வசதியின் வகை | மேலதிப்பற்று |

| | | |
|---|---|---|
| 1 | நோக்கம் | 0 |
| 2 | கூட்டுமொத்த மேலதிகப்பற்று எல்லை | |
| 3 | வசதி வட்டி வீதம் | கீழே விடயம் 4 இன் நிரல் (உ) இனைப் பார்வையிடவும். |
| 4 | காலம் மாதங்களில் (கடன்களுக்கு மட்டும்) | கோரிக்கையின் மீது |
| 5 | தவணைக்கட்டணம் (கடன்களுக்கு மட்டும்) | |
| 6 | மீள்கொடுப்பனவு தொடங்கும் திகதி (கடன்களுக்கு மட்டும்) | |
| 7 | மாதாந்த தவணைக்கட்டணத்திற்குரிய திகதி (கடன்களுக்கு மட்டும்) | |
| 3 | பிணைப்பொறுப்பு | 1. இவ்விண்ணப்பப்படிவத்தின் விடயம் 4 இல் மேலும் விபரமாக விவரிக்கப்பட்ட மற்றும் கீழே வழங்கப்பட்ட வைப்பீடுகளின் மீதான சோந்தை. ஏழு (07) வைப்பீடுகளுக்கு மேல் உள்ள சந்தர்ப்பங்களில் அட்டவணை அ இனைப் பார்வையிடவும். |

| (அ) வைப்பீடு வைத்திருப்பவரின் முழுப் பெயர் | (அ)வைப்புக் கணக்கு இல. | (இ) வைப்பீட்டுத் தொகை | (ஈ) கோரப்பட்ட மேலதிகப்பற்று உப எல்லை | (உ) வசதி வட்டி வீதம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

ஏழு பிணைப்பொறுப்பு வைப்பீடுகளுக்கு மேல் உள்ள சந்தர்ப்பங்களில் பின்னிணைப்பு 01 இனைப் பார்வையிடவும்.

2

3

4

5

இதன்கண் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவையும் பூரணமானவையும் எனவும் ஒவ்வொரு வைப்புடனும் இணைக்கப்பட்ட முறையான வசதி வட்டி வீதம் மற்றும் வைத்திருக்கப்படும் ∴ வைத்திருக்கப்படவேண்டிய பிணைப்பொறுப்பின் சரியானகன்மை உட்பட
இவ்வசதி வழங்கப்படுகின்ற பணத்தினால் ஆதாரப்படுத்தப்படும் மேலதிகப்பற்றுக்களுக்கான நியதிநிபந்தனைகளை நான் ∴ நாம் வாசித்து, விளங்கிக்கொண்டேன் ∴ விளங்கிக்கொண்டோம் எனவும்

நான் ∴ நாம் உறுதிப்படுத்துகின்றேன் ∴ உறுதிப்படுத்துகின்றோம் என்பதுடன் அவற்றை நான் ∴ நாம் ஏற்பதை உறுதிப்படுத்தும் வகையில் இதற்கு எனது ∴ எமது கையொப்பத்தை ∴ கையொப்பங்களை இத்தால் பின்வரும் திகதியன்று நான் ∴ நாம் இடுகின்றேன் ∴ இடுகின்றோம்.

23∴01∴2026

| 1.விண்ணப்பதாரரின் கையொப்பம் | 2. விண்ணப்பதாரரின் கையொப்பம் | 3.விண்ணப்பதாரரின் கையொப்பம் | 4. விண்ணப்பதாரரின் கை |
|---|---|---|---|
| சாட்சி 1 . | | தே.அ.அ ∴ கடவுச்சீட்டு இல. | |
| சாட்சி 2 . | | தே.அ.அ ∴ கடவுச்சீட்டு இல. | |

| | | | | |
|---|---|---|---|---|
| கையொப்பம் ∴ கையொப்பங்கள் சரிபார்க்கப்பட்டது ☐ | வங்கி அலுவலரின் பெ | - | வங்கி அலுவலரின் கையொப்பம் | |
| | நீகு | 0 | | |

வங்கியின் பயன்பாட்டுக்கு மட்டும்

நிகழ் நிலவர அடிப்படையிலான சரிபார் பட்டியல்

| கடன்வழங்கும் உத்தேசம் பற்றிய வகை ∴ தேவைப்படும் ஆவணங்கள் | சொந்த வைப்புக்கு எதிராக தனிப்பட்ட கடன்பெறல் | மூன்றாம் திறத்த வைப்பீட்டுக்கு எதிராக தனிப்பட்ட கடன்பெறல் | கடன்பெறுநர் கூட்டு வைப்பீட்டு கணக்கு வைத்திருப்பவர் ஒருவராகவுள்ளவிடத்து கூட்டு வைப்பீட்டுக்கு எதிராக தனிப்பட்ட கடன்பெறல் | கூட்டுப் பெயர்களில் தமது சொந்த வைப்பீடுகளுக்கு எதிராக கூட்டாகக் கடன்பெறல் | கூட்டுக் கடன்பெறுநர்களுள் ஒருவரின் பெயரில் தனிப்பட்ட வைப்புக்கு எதிராக கூட்டாகக் கடன்பெறல் |
|---|---|---|---|---|---|
| பயன்படுத்தப்படவேண்டிய விண்ணப்பப்படிவம் | தனிநபர் ∴ கூட்டு | | | | |
| உரியமுறையில் பூரணப்படுத்தப்பட்டு கையொப்பமிடப்பட்ட பணத்தினால் ஆதாரப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் மற்றும் உரியமுறையில் பூரணப்படுத்தப்பட்டு கையொப்பமிடப்பட்டு சரிபார்க்கப்பட்டு சாட்சிப்படுத்தப்பட்ட உடன்படிக்கை | √ | √ | √ | √ | √ |
| மூன்றாம் திறத்த வைப்பீட்டுக்கு உரியமுறையில் கையொப்பமிடப்பட்ட எதிரீட்டுக்குக் கடிதம் | ஏற்புடையதல்ல | √ | √ | ஏற்புடையதல்ல | √ |
| மூன்றாம் திறத்தவரான வைப்பீடு வைத்திருப்பவரிடமிருந்தான தனிநபர் உத்தரவாதம் | ஏற்புடையதல்ல | √ழ | √ | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| ஒன்றுக்கு மேற்பட்ட மூன்றாம் திறத்தவரான வைப்பீடு வைத்திருப்பவர்கள் இருக்கின்றவிடத்து மூன்றாம் திறத்தவரான வைப்பீடு வைத்திருப்பவர்களிடமிருந்தான கூட்டு மற்றும் தனித்தனியான உத்தரவாதம் | ஏற்புடையதல்ல | √ழ | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| உருப்படியான ஆவணங்களின் மொத்த எண்ணிக்கை | 1 | 3 | 3 | 1 | 2 |

ழ ஏற்புடையதாகின்றவாறு

| விதந்துரைக்கப்பட்டது | விதந்துரைக்கப்பட்டது.∴அங்கீகரிக்கப்பட்டது | அங்கீகரிக்கப்பட்டது |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| பெயர் மற்றும் பதவிப்பெயர் | பெயர் மற்றும் பதவிப்பெயர் | பெயர் மற்றும் பதவிப்பெயர் |

Classification: External Confidential